# ரொறன்ரோ மாநகரத்துக்கு ஒரு சமூக விருத்தித் திட்டம்

## 2001

சுருக்கம்

TORONTO

TAMIL

## சமூக விருத்தி என்பது வாழ்க்கைத் தரம் பற்றிய விடயமாகும்

சமூக விருத்தி என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விடயமாகும். இவ்விருத்திப் படிமுறையில் ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் முக்கிய பங்கு வகிக்கிறது. இம்மன்றம் தனித்தும் பிற சமூக அமைப்புகளுடன் இணைந்தும் ரொறன்ரோ வாழ் மக்களுக்குப் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகிறது. அவற்றுள் சிறுவர் பராமரிப்பு, முதியோர் இல்லங்கள், நூலகங்கள், பொழுதுபோக்கு வசதிகள், சமூக வீடமைப்பு, பொது சுகாதாரம், விடுதிகள், சமூக உதவிப்படி என்பன அடங்கும்.

சமூகத்தை வலுப்படுத்துவதற்குத் துணைநிற்பதன் மூலமும், எதிர்காலம் குறித்துத் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்றுமாறு மக்களைத் தூண்டுவதன் மூலமும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு இம்மன்றம் பாடுபட்டு வருகிறது.

2001 மார்கழி மாதம் ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் ஒரு மாநகர சமூக விருத்தித் திட்டத்தை அங்கீகரித்தது. அத்திட்டத்தில் இம்மாநகர சமூகத்துக்கு வேண்டிய தலையாய சேவைகள் சுருக்கி உரைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சேவைகளை மேற்கொள்வதிலும் சமூகத்துக்குத் துணைநிற்பதிலும் இம்மன்றம் வகிக்கப்போகும் பங்கும் அதில் சுட்டிக் காட்டபபட்டுள்ளன.

ரொறன்ரோ மாநகரம் எதிர்நோக்கும் இக்கட்டுகள் சிலவும், எம்மை ஒரே மாநகரத்தவர்களாக ஒருங்கிணைக்கும் பொது விழுமியங்களும், எமது சமூக விருத்திக்கு அடிப்படையாய் அமையவேண்டிய நெறிகளும் சமூக விருத்தித் திட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுளளன. ரோறன்ரோ மாநகரத்தின் எதிர்காலத்துக்கு வழிகாட்டும் திட்டவட்டமான நெறிமுறைகள் சிலவும் அதில் முன்வைக்கப் பட்டுள்ளன.

## ரொறன்ரோ எதிர்நோக்கும் இக்கட்டுகள்

பல்வேறு பண்பாட்டு மக்களையும் அரவணைத்து, அவர்கள் அனைவருக்கும் சமூக-பொருளாதாரத் துறைகளில் தகுந்த வாய்ப்பளித்து, வெற்றி ஈட்டி, வரலாறு படைத்த மாநகரமே ரொறன்ரோ. எனினும் இம்மாநகரம் தற்பொழுது பாரதூரமான இக்கட்டுகள் பலவற்றை எதிர்நோக்கியுள்ளது. ஆதலால் அதன் பெருமைக்கு இடர் ஏற்பட்டுள்ளது.

- ரோறன்ரோவில் உள்ளார்க்கும் இல்லார்க்கும் இடையே உள்ள வெளி மிகுந்து வருவதால், இங்கு வாழும் மக்கள் அனைவரதும் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. வசிப்பிட வசதி அற்றோர், வறுமையில் வாடும் சிறுவர்கள் போன்றவர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகி எம்மைப் பீதிகொள்ள வைத்துள்ளது. வருமான பேதங்கள் பெருகி வருகின்றன.
- மத்திய, மாகாண அரசுகள் காலம்காலமாகச் சமூகநலத் திட்டங்களுக்கு — குறிப்பாக வருமான மறுபங்கீடு, வீடமைப்புத் துறைகளைக் கவனிக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி புரியும் பொறுப்புகளுள் பலவற்றைக் கைவிட்டுள்ளன.
- இம்மாநகரம் சமூக நலனைக் கருத்தில் கொண்டு பொது சுகாதாரம், சோலைகள், பொழுதுபோக்கு நிலையங்கள் போன்றவற்றைக் காலம்காலமாகப் பேணிவருகிறது. அத்தகைய கடப்பாட்டுடன் முக்கியமான சமூகநலத் திட்டங்களுக்கு மேற்கொண்டு நிதிவசதி அளிக்கும் பொறுப்பும், அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பும் அதனிடம் சுமத்தப்பட்டுள்ளன.
- அத்தகைய பொறுப்புகளுக்காகும் செலவுகளை இறுப்பதற்குச் சொத்து வரி, பாவனையாளர் கட்டணம் என்பவற்றைப் பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இம்மாநகரத்துக்கு ஏற்பட்டுள்ளது.

மாநகரத்துக்கு வேண்டிய அதிகாரங்கள் அளிக்கப் படாவிட்டால், சமூகத்துக்கு அதன் இக்கட்டுகளை எதிர்கொள்ளும் வல்லமை அளிக்கப்படாவிட்டால், மாநகர மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரமும் குன்றுவதைத் தவிர்க்க முடியாது.

## சமூக விருத்தி நெறிகள்

மக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதும் செம்மைப்படுத்துவதுமே சமூக விருத்தித் திட்டத்தின் இறுதிக் குறிக்கோள். இத்திட்டத்தை ஐந்து நெறிகள் இட்டுச்செல்லும்:

- ஒப்புரவு — வயது, இயலாமை, பால்படுகை, சமூக-பொருளாதாரப் பின்னணி, இனம், இனத்துவம், மதம், பால் நிலைப்பாடு அடிப்படையில் பாகுபாடு காட்டாது ஒப்புரவாக வளங்களை விநியோகித்தல்
- சமத்துவம் — அனைவர்க்கும் சரிநிகரான, திட்பமான, முற்றுமுழுதான உரிமைகள்
- வாய்ப்பு — எவரும் ஆகக்குறைந்த வாழ்க்கைத் தரத்தை இழக்கா வண்ணம் அனைவரும் நியாயமான, ஒப்புரவான முறையில் அனைத்துச் சேவைகளையும் பெறும் வாய்ப்பு: போதிய வருமானம், போதிய சத்துணவு, போதிய-கட்டு படியாகத்தக்க வசிப்பிட வசதி, போதிய உடை
- பங்கு— மாநகரத்தின் வாழ்விலும், எமது பொது வருங்காலத்தை நிர்ணயிக்கும் முடிபுகளை மேற்கொள்ளும் பணியிலும் முற்றுமுழுதாகப் பங்குபற்றும் வாய்ப்பு
- ஒற்றுமை— ஒன்றுக்கொன்று துணைநிற்கும் சமூகங்கள் எழுவதற்கு ஏதுவாக அவற்றிடையே பொது நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும், பன்மையை மதிக்கும் பண்பையும் மேம்படுத்தல்.

## திட்டத்தின் இலக்குகள்

ரொறன்ரோ மாநகராட்சி மன்றம் மாநகர வாசி களுடனும் திட்டம் தீட்டுவோருடனும் சேவைகள் வழங்கும் தாபனங்களுடனும் கலந்துசாவி, இம்மாநகர சமூகத்துககு வேண்டிய தலையாய சேவைகளை இனம்கண்டு, எதிர்கால நடவடிக்கை களுக்கு வழிகாட்டும் இலக்குகளை வரையறுத்துள்ளது.

சமூக விருத்தித் திட்டத்தில் பின்வரும் இலக்குகள் முன்வைக்கப் பட்டுள்ளன:

## சமூகத்தை வலுப்படுத்தல்

- **சமூகத்தின் வல்லமையைப் பெருக்குவதற்கு முன்னின்று உதவுதல்.**

  இம்மாநகரத்தின் கடப்பாடுகள் பினவருமாறு:

  - மாநகராட்சி மன்றமும் சமூகத் தாபனங்களும் கூட்டுப் பெறுப்பு ஏற்க வேண்டும். மனித சேவைகளையும் திட்டங்களையும் மேற்கொள்ளும் முறைமையைப் பேணுவதற்கு மாநகராட்சி மன்றம் உறுதிபூண வேண்டும்;
  - நெகிழ்வும் பொறுப்பும் வாய்ந்த ஒரு சமுதாயக் கட்டுக்கோப்பு இயங்குவதற்கு நீடித்த நிதியுதவி புரிய வேண்டும்;
  - இம்மாநகரம் சேவைத் தாபனங்களை நிர்வகிக்கும் அதே வேளை, நேரடியாகவும் சேவைகளை வழங்கி வருகிறது. இவ்விரு பணிகளையும் அது திட்பமாகவும் சரிநிகராகவும் பேணிவர வேண்டும்;
  - சமூக அமைப்புகள், நிறுவனங்களிடையே ஒத்துழைப்பு, கூட்டுறவு, இணைப்பு ஏற்பட்டு, அவை திட்பமான சேவைகளை வழங்கு வதற்கும், அவற்றுக்காக வாதாடுவதற்கும் உதவ வேண்டும்;
  - சமூகத்தின் வல்லமையை மேம்படுத்தும் பொருட்டுப் பணியாளர்களைக் கொடுத்துதவ வேண்டும்.

- **சமூக, ஆட்சி அலுவல்களில் பங்குபற்றுமாறு மக்களை ஊக்குவிக்க வேண்டும்.**

  இம்மாநகரத்தின் கடப்பாடுகள் பின்வருமாறு:

  - சமூகத் தரப்பினர் அனைவரையும் தீர்மானம் நிறைவேற்றும் படிமுறையில் முன்னின்று பங்குபற்றுமாறு ஊக்குவிக்க வேண்டும்;
  - மாநகரம் இயங்கும் விதம், அதில் மக்கள் முன்னின்று பங்குபற்றும் விதம் குறித்து விபரம் கொடுத்து, அறிவு புகட்டி அவர் களிடையே ஒரு "மாநகர மக்கள் என்ற உணர்வு" பிறப்பதற்குத் துணைநிற்க வேண்டும்;
  - புதிய உத்திகளைக் கண்டுபிடித்து, சமூகத்தின் அனைத்துத் தரப்பினருடனும் தொடர்புகொண்டு, அவர்களை அரவணைத்து, நெகிழ்ந்து கொடுத்துச் செயற்பட வேண்டும்;
  - மக்கள் மாநகரத்துக்குச் சொந்தமான இடங்களில் கூட்டம் கூடவும், பொழுது போக்கவும், கலை நிகழ்ச்சி நடத்தவும் வகுப்பு வைக்கவும் வாய்ப்பு அளிக்க வேண்டும்;
  - அயலைப் பேணுவதில் பற்றுறுதியும் பொறுப்புணர்வும் ஏற்பட ஊக்கம் அளிக்க வேண்டும்;
  - பொது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் பொது மக்கள் பங்களிப்பை நாடவும் மதிக்கவும் வேண்டும்.

- **பொது மக்கள் பொது இடங்களைப் பயன்படுத்த மேன்மேலும் வாய்யப்பளிக்க வேண்டும்.**

  பொது மக்கள் பொது இடங்களைப் பயன்படுத்த மேன்மேலும் வாய்யப்பளிக்க மாநகரம் உறுதிபூண வேண்டும். அதற்காக:

  - பொது மக்கள் மாநகரத்துக்குச் சொந்தமான இடங்களை நியாயமான நியதிகளின்படி பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்;
  - பாடசாலைகள் சமூகத்தின் சொத்து என்பதை மாகாண அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், சமூகம் பாடசாலை களைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் செலவுகளை மாகாண அரசு அதன் கல்வி-நிதியுதவித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வாதாட வேண்டும்.

## முற்றுமுழுதான சமூகக் கட்டுக்கோப்புத் துறையில் முதலீடு

- **சமூக விருத்தியைப் பொறுத்தவரை முதலீடு செய்யவேண்டிய துறைகளை இனம்காண வேண்டும்.**

  இம்மாநகரம் எமது சமூகத்துடன் கலந்துசாவி, ஆட்களின் நலனையும் சமூகத்தின் நலனையும் சாலவும் மேம்படுத்தும் பிரதான துறைகளை நிச்சயித்து, முதலீட்டுக்கு வழிவகுக்க வேண்டும். சமூகத்தின் தேவையையும், மாநகரம் முழுவதும் சேவைகளும் வசதிகளும் ஒப்புரவாகக் கிடைக்க வேண்டும் என்ற நெறியையும் கருத்தில்கொண்டே முதலீடு சம்பந்தமாக முடிவெடுக்க வேண்டும்.

- **திட்பமுற இணைந்து திட்டம் தீட்டும் திறமையைப் பெருக்குதல்**

  - திட்டம் தீட்டுவதற்கும் ஒழுங்குபடுத்து வதற்கும் வாய்க்கக்கூடிய வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தி சமூகக் கட்டுக்கோப்பு விரிவடைவதற்கு இம்மாநகரம் உதவ வேண்டும்;
  - மனித சேவைகள் வழங்கும் துறைகள் அனைத்தும் இன்னும் நெருங்கி ஒத்துழைத்து, சேவைகள் வழங்கும் முறை களைத் திட்டமிட்டு, மாநகரம் முழுவதிலும் அதன் குறிச்சிகளிலும் எழும் தேவைகளை இன்னும் சிறந்த முறையில் நிறைவுசெய்ய வேண்டும். பல்வேறு துறைகளும் இன்னும் பாடுபட்டுத் தாம் வழங்கும் சேவைகளை இயைபுபடுத்தி, ஒருங்கிணைத்து திட்டமிட்டு வழங்க வேண்டும், ஒருங்கு சேர்ந்து வசதிகளைப் பயன்படுத்த வேண்டும்;
  - சமூக அமைப்புகள் சமூகத்துக்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டும் முயற்சியில் ஈடுபடுவதற்கும், சமூகத்தின் வல்லமையையும் நன்னிலையையும் சுட்டிக்காட்டும் அம்சங்களை வகுப்பதற்கும் போதிய நிதியுதவி அளிக்கப்பட வேண்டும்.

♦ **சமூகத்தைக் கண்காணித்து, அறிக்கையிடும் பணியை விரிவுபடுத்தல்**

சமூக, அயல் சேவை புரியும் அமைப்புகள் சமூகத்தைக் கண்காணிக்கும் பணியையும் அறிக்கை அட்டைகள் போன்ற சாதனங்களையும் விருத்தி செய்து, சீரமைப்பதில் தொடர்ந்து தலையாய பங்கு வகிக்க வேண்டும். அறிக்கை அட்டைகளில் செம்மை சார்ந்த திட்டவட்டமான இலக்குகளுடன் கூடிய முழு அம்சங்களும் சுட்டிக்காட்டப்படல் வேண்டும். முதலீட்டுத் திட்டத்தை நாடிநிற்கும் துறைகளை இனம் காண்பதற்கும் திணைக்கள முறைமையைத் திட்டமிடுவதற்கும் அவை உதவும்.

கண்காணிப்பைச் சுட்டிக்காட்டும் அம்சங்களுள் முக்கியமானவை:

- ஆட்களின், சமூகங்களின், குறிப்பாகத் தீங்குறவல்ல தரப்பினரின் உடனலத்தையும், நன்னிலையையும் கணித்துக் காட்டும் அம்சங்கள்;
- சமூக விருத்தியின் முன்னேற்றத்தை அளந்து காட்டும் அம்சங்கள். சமூகம் பெரிதும் புரிந்து பயனடையும் வண்ணம் தெளிவாகவும் நேரடியாகவும் அளந்து காட்டும் அம்சங்கள்.

♦ **திட்டத்தின் வெற்றியை மதிப்பிடல்**

நெகிழ்வும் இசைவும் கொண்டு மனித சேவைகள் வழங்க உறுதிபூண்ட இம்மாநகரத்தின் கடப்பாடுகள் பின்வருமாறு:

- வகுத்துரைத்த திட்டங்கள் வரையறுத்த பெறுபேறுகளை எவ்வளவு சிக்கனமாகவும் செப்பமாகவும் ஈட்டியுள்ளன என்பதை ஒழுங்காக மதிப்பிடும் உத்திகளைத் தொடர்ந்து மேம்படுத்திச் சீரமைத்து வரவேண்டும்;
- மதிப்பிட்டுக் கண்டறிந்த முடிபுகளைப் பயன்படுத்தி, சேவை வழங்கும் திட்டங்களைத் தீட்டி, சேவை வழங்கி வர வேண்டும்.

♦ **மாநகரம் கனிவு, நெகிழ்வு மிகுந்த ஏற்பாடுகள் மூலம் வருமானம் நாடுதல்**

மாநகரம் அதன் முகாமைப் பொறுப்புக்கு உகந்த புதிய கனிவு மிகுந்த உபாயங்கள் மூலம் வருமானம் சம்பாதித்து, பகிர்வதற்கு வேண்டிய அதிகாரத்தை நாட வேண்டும்.

## மக்கள் வகிக்கும் தலைமை, பங்கு என்பவற்றை விரிவுபடுத்தல்

♦ **பாரிய ரொறன்ரோ பிராந்தியத்தில் சமூக விருத்தி காண்பதற்குக் கூட்டுத் திட்டம் வகுக்கப் பாடுபடுதல்**

ரொறன்ரோ மாநகரம் பாரிய ரொறன்ரோ பிராந்தியத்தில் இயங்கும் ஏனைய மாநகரங்களுடன் ஒருங்கிணைந்து சமூக விருத்தி காண்பதிலும் மனித சேவைகள் வழங்குவதிலும் ஈடுபட வேண்டும.

♦ **ஏனைய மாநகரங்களுடன் சேர்ந்து நாடளாவிய நகர நிகழ்ச்சிநிரலை உருவாக்குதல்**

ரொறன்ரோ மாநகரம் பாரிய ரொறன்ரோ பிராந்தியத்திலும், ஒன்ராறியோவிலும், எஞ்சிய கனேடிய மண்ணிலும் இயங்கும் ஏனைய மாநகரங்களுடனும் மாநகர அமைப்புகளுடனும் தொடர்ந்து ஒத்துழைத்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் பின்வருமாறு:

- மாநகரங்களின் அதிகாரங்களையும், ஏனைய அரசுத் துறைகளுடன் அவை பூணும் உறவையும் மீள வரையறுக்க வேண்டும்;
- நாடளாவிய நகர நிகழ்ச்சிநிரல் ஒன்றை உருவாக்கும்படியும், நகரக் கட்டுக்

கோப்புக்கும் சமூகக் கட்டுக்கோப்புக்கும் துணைநிற்பதில் இன்னும் முன்னின்று பங்கு வகிக்கும்படியும் மத்திய அரசைத் தூண்ட வேண்டும்.

♦ மாநகரம் வலுவுடன் வாதாடுதல்

அனைத்துத் தரப்புகளையும் சேர்ந்த மக்களுடன் சேர்ந்து அரசின் மேல் மட்டத்தவர்களிடம் சமூக, சமூகநல சேவைகளை நிர்வகிக்கவும் அவற்றுக்குச் செலவிடவும் போதிய அதிகாரமும் வளமும் வழங்கும்படி வாதாட வேண்டும். மாநகரத்தின் வாதாட்டம் பின்வரும் முற்கூற்று களுக்கு அமைய வேண்டும்:

- சமூகக் கட்டுக்கோப்புக்கு அத்தியாவசிமான சிக்கன வீடமைப்பு போன்ற துறைகளுக்கு நிதியுதவி புரிவதற்கு மாகாண அரசு உறுதிபூண வேண்டும்;
- வீடமைப்பு, சிறுவர் பராமரிப்பு, குடிவரவு, குடியமர்வுச் சேவைகள் போன்ற முக்கிய பொறுப்புவாய்ந்த சமூகத் துறைகளுக்குத் தலைமை வகிப்பதாக மத்திய அரசு மீள உறுதியளிக்க வேண்டும்.

சமூக விருத்தித் திட்டம் பற்றிய மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

தொலைபேசி — **416-392-5617**

தொலைநகல் — **416-392-8492**

மின் அஞ்சல் — **socdev@city.toronto.on.ca**

இணையத் தளம் — **www.city.toronto.on.ca/sds**